மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்குமாகாணம்
Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை- 2023

**தரம்:- 11 (42) கர்நாடக சங்கீதம் - செய்முறைப் பரீட்சை ( பரீட்சகருக்கானது)**

| | | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|
| **செயற்பாடு 01**<br><br>அப்பியாச கானம் | 01. கீழே குறிப்பிடப்பட்ட அப்பியாச கானத் தொகுதிகளில் ஏதேனும் ஒரு தொகுதி பரீட்சகர் குழுவினால் கேட்கப்படும்.<br><br>A - சதுஸ்ரஜாதி துருவதாள அலங்காரம்<br>B - கண்டஜாதி அடதாளம்<br>C - சஞ்சாரி கீதம்<br><br>➢ அப்பியாசகான உருப்படியின் இராகம், தாளம், ஆரோகண, அவரோகணம், ஸ்வரஸ்தானம் என்பவற்றை குறிப்பிடல். (4 புள்ளிகள்)<br>➢ ஸ்வரம், சாகித்திய அமைப்பிற்கேற்ப சுருதி, இராக தாளத்துடன் பாடல் (4 புள்ளிகள்)<br>➢ ஸ்வரம் அல்லது சாகித்தியத்தை இராக பாவத்துடன் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ ஸ்வரம் அல்லது சாகித்தியத்தை தெளிவாக உச்சரித்துப் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ அப்பியாச கான உருப்படிகளில் ஒன்றை முழுமையாகப் பிழையின்றிப் பாடுதல் (4 புள்ளிகள்) | 20 |
| **செயற்பாடு 02**<br><br>சபா கானம் | 01. பாடத்திட்டத்திலுள்ள விரும்பிய சபாகானம் ஒன்றைப் பாடுதல்<br>• மத்திமகால கீர்த்தனை<br>• பதம்<br>• இராகமாலிகை<br>• தான வர்ணம்<br>➢ உருப்படிகளைச் சுருதி சுத்தமாகப் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ உருப்படிகளைத் தாள சுத்தத்துடன் பாடுதல். வர்ணத்தின் எல்லா அங்கங்களையும் இரண்டு காலங்களிலும் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ உருப்படிகளைப் பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் சுத்தமாகப் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ உருப்படிகளை இராகக் கலப்பின்றி இராக பாவத்துடன் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ உருப்படிகளை மனனம் செய்து முழுமையாகப் பிழையின்றி பாடுதல் (4 புள்ளிகள்) | 20 |

| | | |
|---|---|---|
| **செயற்பாடு 03**<br><br>பண்ணிசை | 01. விரும்பிய தேவாரம் ஒன்றைப் பாடுதல்<br>• உற்றுமை சேர்வது<br>• பண்ணும் பதமேழும்<br>• மானினேர் விழி<br>02. கீழே குறிப்பிடப்பட்ட பண்ணிசைத் தொகுதிகளில் ஏதேனும் ஒரு தொகுதி பரீட்சகர் குழுவினால் கேட்கப்படும்.<br>• திருவிசைப்பா அல்லது திருப்பல்லாண்டு<br>• அபகாரநிந்தை பட்டுழலாதே<br>அல்லது<br>ஏறுமயில் ஏறிவிளையாடு<br>➢ பண்முறைக்கேற்ப பக்தியுடன் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ பண்முறைக்கேற்ப சுருதியுடன் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ பொருளுணர்ந்து சொற் தெளிவுடன் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ பண்ணிசைப் பாடல்களை மனனம் செய்து பிழையின்றி முழுமையாகப் பாடல் (4 புள்ளிகள்)<br>➢ பண்ணிசைப் பாடல்களின் பண் / இராகம், அருளியவர், தாளம் இருப்பின் தாளத்தையும் குறிப்பிடுதல் (4 புள்ளிகள்) | 20 |
| **செயற்பாடு 04**<br><br>தாளம் தொடர்பானது<br><br>ஆரோகண, அவரோகணம் தொடர்பானது | ➢ தாளம் தொடர்பானது<br>1. சப்த தாளங்கள்<br>2. சாபு தாளங்கள்<br>திஸ்ர சாபு<br>கண்ட சாபு<br>மிஸ்ர சாபு<br>➢ ஆரோகண, அவரோகணம் தொடர்பானது, மாயாமாளவகௌளை, ஹம்சத்வனி,மோகனம், சங்கராபரணம், ஆரபி, பிலஹரி, பந்துவராளி, கல்யாணி, மத்தியாவதி<br>➢ சப்த தாளங்களில் அல்லது சாபு தாளங்களில் ஒன்றை ஆசிரியர் போட்டுக் காட்ட தாளத்தின் பெயர், அங்கம், அட்சர எண்ணிக்கை, ஜாதி / ஜதி சாபு தாளமாயின் உருப்படி ஒன்று உதாரணம் என்பவற்றைக் கூறுதல். (4 புள்ளிகள்)<br>➢ மாணவர் விரும்பிய சப்த தாளம் அல்லது சாபு தாளத்தைப் போட்டுக் காட்டி தாளத்தின் பெயர், அங்க அடையாளம், ஜாதி / ஜதி, அட்சர எண்ணிக்கை சாபுதாளமாயின் உருப்படி உதாரணம் ஒன்று கூறுதல். (4 புள்ளிகள்)<br>➢ ஆசிரியர் பாடிக்காட்டும் ஆரோகண, அவரோகணத்தின் இராகத்தின் பெயர், ஜனகமா / ஜன்னியமா, ஸ்வரஸ்தானம் என்பவற்றைக் கூறுதல் (4 புள்ளிகள்)<br>➢ மாணவர் விரும்பிய ஒரு இராகத்தின் ஆராகண அவரோகணத்தை ஸ்வரஸ்தான சுத்தமாக சுருதியுடன் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ பாடத்திட்டத்திலுள்ள மூன்று உருப்படிகளின் இராகத்தைக் குறிப்பிடுதல் (4 புள்ளிகள்) | 20 |

| | | |
|---|---|---|
| **செயற்பாடு 05**<br><br>ஆக்கம் | ➢ பரீட்சகர் குழுவினால் கொடுக்கப்பட்ட சிறுவர் பாடலுக்குப் பொருத்தமான மெட்டமைத்து லயத்துடன் பாட வேண்டும். இசையமைப்பு புதிய இசையாக அமைதல் வேண்டும்.<br>➢ தெரிவு செய்த பாடலுக்குப் பொருத்தமான மெட்டினைத் தெரிவு செய்தல். (4 புள்ளிகள்)<br>➢ பொருத்தமான மெட்டிற்கேற்ப லயத்தைத் தெரிவு செய்தல. (4 புள்ளிகள்)<br>➢ சுருதி, லயத்தோடு பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ பாடலைச் சொற்தெளிவுடன் பாடுதல் (4 புள்ளிகள்)<br>➢ பாடலை முழுமையாக சுருதி, இராக, லயத்தோடு பாடுதல் (4 புள்ளிகள்) | 20 |

செயற்பாடுகள் ஐந்திற்குமான மொத்தப் புள்ளிகள் 100